சேர்ந்தவர்கள் இல்லை. அவர்கள் மலையை ஆண்டவர்களோ, என்னவோ ; எப்படியோ அவர்களுக்கு அந்தப் பெயர் வந்திருக்கிறது. அவர்களுடைய குழந்தைகளைப் படிக்க வைப்பதற்கு, மலைவாழ் மக்கள் அவர்களுடைய சலுகைகளைப் பெறுவதற்கு சர்டிபிகேட் கேட்டால் கொடுக்காமல் இருக்கிறார்கள். தாசில்தாரோ மற்றவர்களோ அவர்களுக்குரிய சர்டிபிகேட்டுகளைக் கொடுக்க மறுக்கிறார்கள். அவர்களை, பழங்குடியினர், மலைவாழ் மக்கள் என்று அரசு ஒத்துக்கொண்டு, அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். மலையாளிகள் என்ற பெயர் இல்லை என்று வேறு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் உடனடியாக முன்வந்து—அவர்கள் நீண்ட காலமாக மலையிலே வாழ்ந்துகொண்டு இருக்கக்கூடியவர்கள் ; நாகரீகம் அற்றவர்கள்—இதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுமாதிரியான பல்வேறு கோரிக்கைகள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இதுபற்றி கூடிய விரைவில் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 3207 மற்றும் 3235 மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

துணை மின் நிலையம் அமைத்தல்.

*3775 திரு. எம். முகமது சித்திக்:

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தரங்கம்பாடி, சந்திரபாடி, பொறையார், மாணிக்க பங்கு போன்ற பகுதிகளின் நலனுக்காக துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு தலைவர் அவர்களே,

ஆம்.

1989 நவம்பர் 1]

திரு. எம். முகமது சித்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் தரங்கம்பாடி என்பது ஒரு மைய மான தாலுக்கா அலுவலகத்தைக் கொண்ட பகுதி. அந்தப் பகுதியில் மின்சாரப் பற்றாக்குறை இருந்து வருகிறது. ஏறத் தாழ 15 பஞ்சாயத்துக்களில் குறைந்த மின் அழுத்தம் உள்ள மின் சாரமே கிடைத்து வருகிறது. அங்கே துணை மின் நிலையம் அமைப்பதை அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கி றேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரங்கம்பாடி பகுதிக்கு இப்போது வேலங் குடியிலிருக்கின்ற 66/15 கிலோ வாட் மின்சாரம் துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் நடைபெற்றுக் கொண்டிருக் கிறது. பெருகிவரும் மின் தேவையைக் கருத்தில் கொண்டு புதிதாக 33/11 கிலோ வாட் கொண்ட துணை மின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு அரசு முயற்சி எடுத்து நடைமுறைப் படுத்தவிருக்கிறது. வருகின்ற 1993-94 ஆம் ஆண்டிலே அது முடிவு பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டம்.

* 3783. திரு. கே. அர்ஜுனன்:

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட இலவச மின் இணைப்பு திட்டம் தற்போது கைவிடப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் மீண்டும் செயல்படுத்தப் படுமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கைவிடப்படவில்லை. குடிசைகளுக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்பு திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

TRUTH ALONE TRIUMPHS